புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

=============================================================

# சங்ககால ஏழு வள்ளல்கள் கடையெழு வள்ளல்களாக மாற்றப்பட்ட வரலாறு

=============================================================

**முனைவர் ஆ. சந்திரன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

=============================================================

**முன்னுரை**

நன்னன் சேய் நன்னன் வழங்கும் ஈகையின் பெருமிதத்தைப் பற்றிச் சொல்வதற்காகப் புலவர் முடியுடைய மூவேந்தர்களான சேரர் சோழர் பாண்டியர் ஆகியோர் தரும் கொடைகளைவிடப் பேகன், காரி, பாரி ஆய், அதிகன், நள்ளி, ஓரி, உள்ளிட்ட எழுவர் தரும் வள்ளல் தன்மையைவிட நல்லியக்கோடனின் வள்ளல் தன்மை சிறந்தது என்கிறது சிறுபாணாற்றுப்படை பாடலில் 'எழுவர் பூண்ட ஈகை…' என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பாடலில் சொல்லப்பட்டுள்ள எழுவரை கடையெழு வள்ளல் என்று ஆசிரியர் கூறவில்லை என்பதும் எழுவர் என்ற சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ள மற்றொரு சங்கப் பாடலான புறநானூற்று 158 வது பாடல் ஆசிரியரும் 'கடையெழு வள்ளல்' என்று கூறவில்லை என்பதையும் நாம் தெளிவாகப் பார்க்க முடிகின்றது. மேலும், இரு பாடல்களிலும் ஏழு என்ற எண்ணிக்கையில் வள்ளல்கள் இருந்தாலும் அவர்களில் ஆறு பேர் இரண்டு புலவர்களாலும்

சுட்டப்பட்டும் ஏழாவது நபராக அதிகன் (சிறுபாணாற்றுப்படை) எழினி (புறநானூறு158) என வெவ்வேறு நபர்களும் சுட்டப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டு பார்க்க வேண்டி உள்ளது.

இது ஒரு புறமிருக்க கடையெழு வள்ளல்கள் என்ற சொல் சங்க இலக்கியங்களில் எங்கும் கூறப்படவில்லை. அப்படி இருக்க எழுவர் எப்படிக் கடையெழு எள்ளல் ஆயினர் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டி உள்ளது? இது ஒருபுறமிருக்க கடையெழு எள்ளல்களுக்கு முன்னர் இருந்த வள்ளல்கள் என்ற பொருளைத் தரும் வகையில் அதே ஏழு என்ற எண்ணிக்கையில் தலையெழு வள்ளல்கள் மற்றும் இடையெழு வள்ளல்கள் என்று ஒரு பட்டியல் இன்று தமிழ் இலக்கிய உலகில் உலா வந்துகொண்டுள்ளது. ஏழு வள்ளல்கள் கடையெழு வள்ளல்கள் ஆன அல்லது ஆக்கப்பட்ட வரலாற்றுப் பின்னணி குறித்தும் அதன் முன்னர் இருந்ததாகச் சொல்லப்படும் தலையெழு வள்ளல்கள் மற்றும் இடையெழு வள்ளல்கள் குறித்தும் ஒரு வாசிப்பை இக்கட்டுரை முன் வைக்கிறது.

**தலையெழு இடை யெழு கடையெழு வள்ளல்கள்**

தலையெழு இடை யெழு கடையெழு வள்ளல்கள் என்ற பெயர்கள் சங்க இலக்கியங்களில் எங்கும் கூறப்படவில்லை. தலையெழு இடையெழு கடையெழு என்ற மூன்று சொற்களுக்குத் தமிழ் லெக்ஸிகனில் பொருள் சொல்லப்படவில்லை. ஆனால் கடையெழஞ்சனி என்ற சொல்லுக்கு ‘உத்திரநாள்’[1] என்ற பொருளைத் தருகின்றது அகரமுதலி, மற்றும் தமிழ் லெக்ஸிகன். வள்ளல் என்ற சொல்லுக்கு ‘வரையாது கொடுத்தோர்’[2] என்று பொருள் தரும் அபிதான சிந்தாமணி குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி முதலோர் முதல் எழுவள்ளல்கள் அக்குரூரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன் (கர்ணன்), சந்திமான், சிசுபாலன், தந்திவக்கிரன் இவர்கள் எழுவரும் இடை எழுவள்ளல்கள். எழினி, காரி, ஒரி, நள்ளி, பாரி, பேகன், மலையன் இவர்கள் எழுவரும் கடைவள்ளல்கள்” என்று ஒரு பட்டியலைத் தருகிறது. மேற்கண்ட அதே பட்டியலைத் தமிழ்ச் சுவடியும் தருகிறது[3]. இந்தப் பட்டியல் எங்கிருந்து வந்தது எப்படி உருபெற்றது என்ற எந்த ஒரு முழுமையான நம்பத்தகுந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லை. மேலும், இந்தப் பட்டியலில் உள்ள பெயர்களில் பல்வேறு முரண்பாடுகளைப் பார்க்க முடிகின்றன. முதல் எழு வள்ளல் மற்றும் இடையெழு வள்ளல்கள் என்ற முதலிரு தொகுப்புகளும் வரலாற்றுக்கு முரணாக உள்ளன. காரணம், குமணன் கடையெழு வள்ளல்களின் காலத்துக்குப் பிற்பட்டவன் (புறம்.158). செம்பியன்

எனக் குறிப்பிடப்படுபவன் சிபி சக்கரவர்த்தி எனப் பேசப்படுபவன். தந்துமாறன் என்னும் வள்ளலைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. நிடத நாட்டு மன்னன் நளன் பற்றிய இலக்கியம் உள்ளது. பிற மூவரும் புராணக்கதை மாந்தர்களாக உள்ளதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இடையெழு வள்ளல்கள் என்றழைக்கப்படும் அக்குரன், அந்திமான், கர்ணன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன் அகிய இவர்கள் புராண - இதிகாச படைப்புக்களாக உள்ளனர். மேலும் இவர்கள் உண்மையில் வாழ்ந்ததற்கான சான்றுகள் ஏதும் இல்லை என்பது ஒருபுறமிருக்க தமிழில் சங்க காலத்தில் அல்லது அதற்கு முன்னர் வாழ்ந்ததற்கான குறிப்புகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன், இவர்களில் ஒருவரும் தமிழர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, இவ்விரு பட்டியலில் உள்ள பலர் தமிழுடன் எந்தவித தொடர்பு இல்லாதவர்கள். அப்படி இருக்க `இவர்கள் சங்க எழு வள்ளல்களுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்ற பொருள்படும்படி எப்படி முதல் இடை வள்ளல்களாகக் குறிக்கப்படுகின்றார்கள்?` என்ற கேள்வி இங்கு இயல்பாக எழுகின்றது? அதற்கு வெளிப்படையான பதில் அது தமிழ் ஏழு வள்ளல்களை சிறுமைப்படுத்தடுத்துவது என்பதைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்பது தெளிவான உண்மை. அதாவது, உண்மையான தமிழ் ஏழு வள்ளல்களை இருட்டடிப்புச் செய்வதே இதன் நோக்கமாகும். அதைவிட வேறு என்ன? நோக்கம் இருந்துவிடப்போகிறது?

**எழுவர் என்ற சொல்**

சங்க இலக்கியங்களில் எழுவர் என்று சொல் ஒன்று ஆய், நள்ளி, பேகன், ஓரி, காரி, பாரி, அதியமான் (அ) எழினி, ஆகிய வள்ளல்களோடு தொடர்பு உடையதாக உள்ளது. இரண்டு எழுவர் என்ற சொல் தலையாலங்கானத்து செறுவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் எதிர்த்து நின்ற சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் ஆகிய ஏழு மன்னர்களைக் குறிப்பதாகவும் உள்ளது. சிறுபாணாற்றுப்படையில் சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தர்கள் பாரி முதலான ஏழு வள்ளல்கள் தரும் ஈகையைவிட நல்லியக்கோடன் ஈகை சிறந்தது என்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. புறநானூறு 158 வது பாடலில் குமணன் என்ற வள்ளலை நோக்கிப் பாடிய பெருஞ்சித்திரனார் பாடிய பாடலில் பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி, (அதியனுக்கு மாறாக எழினி கூறப்பட்டுள்ளது) ஆகிய ஈகையில் சிறந்தவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் ஈகை அளிப்பவர் யாரும் இல்லாததால் உன்னை நோக்கி வந்திருக்கிறேன்

என்பதாக உள்ளது. வள்ளல்கள் எழுவர் என்று கூறும் சிறுபாணாற்றுப்படை மற்றும் புறநானூற்று 158 ஆம் பாடல் அடிப்படையில் முறையே ஒய்மானாட்டு நல்லியக்கோடன் மற்றும் குமணன் என்ற இரு வள்ளகளையும் சிறப்பித்துக் கூறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அதாவது, நல்லியக்கோடன் அளிக்கும் பரிசில் ஏழு வள்ளல்கள் அளிக்கும் பரிசிலைவிடச் சிறந்தது என்று கூற, வள்ளல் எழுவரும் இறந்தது போனதால் குமணனிடம் வந்துள்ளதாகப் பெருஞ்சித்திரனார் பாடுகின்றார். இது ஒரு புறம் இருக்க மறுபுறம் ஏழு என்பது ‘‘சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற அரசர்கள் எழுவரைக் குறிப்பதாக’’ (அகம். 36:13-20) அகநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது. மேலும், எட்டுத்தொகையில் உள்ள பாடல்களில்,

‘’நேரா எழுவர் அடிப்படக் கடந்த’’(அகம். 209:5)

மற்றும்

‘’எழுவர் நல்வழம் கடந்தோய்!... ‘’(புறம். 19:17)

மற்றும்

“புனைகழல் எழுவர் நல் வலம் அடங்க” (புறம்.76:12).

எனப் பாண்டியன் நெடுஞ்செழியனோடு போரிட்டவர் எழுவர் என்று மட்டும் குறித்துச் சென்றுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது. இதற்கு மாறாக மதுரைக்காஞ்சியில்,

‘இருபெரு வேந்தரோடு வேளிர் சாய’ (மது.கா.55)

என்று இரண்டு பெரு வேந்தர்கள் மற்றும் ஐந்து குறுநில மன்னர்கள் என்று குறிப்பிடுகின்றது என்பதையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இது ஒரு புறமிருக்க,

“ஒரு பகல் எழுவர் எய்தி யற்றே” (புறம்.358)

வான்மீகியார் என்ற புலவரால் பாடப்பட்ட புறநானூற்றுப் பாடலில் ‘உலகம் ஒரு நாளில் எழுவரைத் தலைவராகக் கொண்டது’ என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது.

அதாவது, எழுவர் என்பது சங்கப் பாடல்களில் ஏழு வள்ளல்களை மட்டுமன்றி ஏழு அரசர்கள், ஏழு தலைவர்கள் என மூன்றுவிதமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏழு மன்னர்கள் என்ற குறிப்பினை மதுரைக்காஞ்சி இருபெரு வேந்தர், வேளிர் (2 + 5) என்று கூறுவதை நோக்க இந்த எண்ணிக்கை புலவர்களின் விருப்பத்தில் அமைந்த ஒன்று என்பதைத் தவிர இந்த எண்ணிக்கை பற்றி நாம் பெரிதாகச் சிந்திக்கத் தேவை இல்லை என்பது தெளிவாகிறது.

**வள்ளல் எழுவர் மட்டும் தானா?**

சங்க காலத்தில் எழுவர் மட்டும் தான் கொடைப் பண்பு கொண்டவர்கள் இருந்தார்களா? என்ற ஒரு கேள்வியையும் இந்த கடையெழு வள்ளல் என்ற சொல் தவறான ஓர் அர்த்தத்தையும் வழங்குகின்றது. காரணம் நாஞ்சில் வள்ளுவன், சிறுகுடி கிழான், பண்ணன், அம்பர் கிழான், அருவந்தை, ஆவியன், ஆதனுங்கன், எவ்வி என முப்பதுக்கும் மேற்பட்ட வள்ளல்கள் பற்றிய பதிவுகளைச் சங்கப் பாடல்கள் தருகின்றன. அது மட்டுமன்றி பத்துப்பாட்டில் தொண்டைமான் இளந்திரையன் (பெரும்பாணாற்றுப்படை), இளந்திரையன் (பெரும்பாணாற்றுப்படை), கரிகாலன் (பொருநராற்றுப்படை), நல்லியக்கோடன் (சிறுபாணாற்றுப்படை), நன்னன் சேய் நன்னன் (கூத்தராற்றுப்படை) மற்றும் தமிழ் கடவுளாகப் போற்றப்படும் முருகன் (திருமுருகாற்றுப்படை) என ஒரு பட்டியலையும் நாம் ஆற்றப்படை நூல்கள் என்ற பின்புலத்தில் காண்கின்றோம். இந்தப் பட்டியலில் உள்ள ஒருவரையும் பற்றி முதல்இடைகடை என்ற அந்த வள்ளல்களின் பட்டியலில் சொல்லப்படவில்லை என்பதை வைத்தே நாம் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளலாம்.

**எழு வள்ளல் - கடையெழு வள்ளல்**

சங்க இலக்கியப் பாடல்களில் எங்கேயும் எழுவர் என்ற சொல் கடை எழு என்ற அர்த்தம் கொள்ளும் வகையிலான குறிப்புகள் இல்லை என்று ஏற்கனவே பார்த்தோம். அப்படி இருக்க கடையெழு வள்ளல்கள் என்ற சொல் எவ்வாறு தமிழ்ச் சொல்லில் இன்று நிலை பெற்றது என்பது குறித்த சில பதிவுகளை இனிப் பார்க்கலாம். 1909 ஆம் அண்டு கி.வா. ஜகநாதன் 'எழு பெரு வள்ளல்கள்' என்ற பெயரில் சங்ககால வள்ளல்கள் எழுவரை அறிமுகம் செய்கிறார். அந்நூலின் முன்னுரையில், 'பழைய நூல்களில் உள்ளக் குறிப்புக்களைக் கொண்டு ஒருவாறு

நிகழ்ச்சிகளைத் தொடர்புப்படுத்தி, ஏழு வள்ளல்களின் வரலாறுகளையும் இந்தச் சிறுநூலில் எழுதியிருக்கிறேன். தமிழ்நாட்டுச் சிறுவர்களும் சிறுமியரும் இவற்றைப் படித்துப் பயன்பெறக்கூடும் என்பது என் எண்ணம்'[4] என்று குறிப்பிடுகிறார். அந்த நூலின் அட்டையில் இடம் பெற்றுள்ள 'எழு பெரு வள்ளல்கள்' தலைப்பின் கீழ் அடைப்புக் குறியில் 'கடையெழு வள்ளல்' எனக்குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான எந்த விளக்கமும் நூலில் இல்லை. 1930 ஆம் ஆண்டு 'கடையெழு வள்ளல்கள் சரித்திரம்' என்ற பெயரில் ஒரு நூல் கா.மு. சின்னப்பா பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த நூலின் தலைப்பு (THE LAST SEVEN VALLALS) என்று ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளது. மேலும் அந்நூலின் முன்னுரையில், 'வள்ளல் என்ற சொல்லுக்குத் தன்னிடம் வந்து ஏதாவது ஒன்றைக் கேட்போருக்கு இல்லை என்று சொல்லாமல், வாங்குபவர் "போதும் போதும்" என்று சொல்லுகிற வரையில் அவர்கட்கு வேண்டிய பொருளை வாரி வாரிக் கொடுக் கும் கொடைக்குணம் உடையோர் என்பது பொருளாம்.

அவ்வள்ளல் தன்மையுடையவர்கள், மூன்று வகையினராவார்கள். யாசிக்க வருபவர், தம்மைப் பார்த்து இன்ன பொருள் வேண்டும் என்று கேட்பதற்கு முன்னமே அவர்கள் முகக்குறிப்பை உணர்ந்து, வேண்டும் பொருளை அளிப்போர் முதல் வள்ளல் என்றும்; இன்ன பொருள் வேண்டும் என்று கேட்டபிறகு கொடுப்போர் இடை வள்ளல் என்றும்; தம்மைப் புகழ்ந்து கூறிய பின்பு கொடுப்போர் கடை வள்ளல் என்றும் கூறப்படுவார்கள். நம்முடைய நாட்டில், இம்மூவகைத் தன்மையிற் பலர் புகழ்பெற்றுள்ளார்கள். அவர்களை முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் என வகைக்கு எழுவராக வகுத்துப் புகழ்ந்து கூறியுள்ளார்கள் இவர்கட்குப் பின்வந்த நம் பெரியோர்கள். அம்முப்பிரிவினருள் கடையெழு வள்ளல்கள் சரித்திரங்களை விளக்கமாய் அறிவோம்''[5] என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிறகு பலர் 'கடையெழு வள்ளல்கள்' என்ற பெயரில் சங்க எழு வள்ளல்கள் குறித்து அறிமுகம் செய்து நூல்களை வெளியிட்டுள்ளனர் (வெளியிட்டும் வருகின்றனர்).

**முடிவுரை**

கடையெழு வள்ளல்கள் யாவர்? கடையெழு வள்ளல்கள் குறித்து விளக்கி வரைக. என்பன போன்ற வினாக்களை இன்று கல்விப் புலத்தில் பார்க்க முடிகின்றன. சங்க இலக்கியங்களில்

எங்கும் இல்லாத ஒரு சொல்லை இன்று நாம் கல்விப்புலத்தில் சாதாரணமாகப் பயன்படுத்துவதைப் பற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அதனால் சங்க காலத்தில் வாழ்ந்ததாக பாடல்களில் கூறப்பட்டுள்ள முப்பதுக்கும் மேற்பட்டவர்களைப் புறந்தள்ளுவது ஒரு புறமிருக்க தமிழ் மண்ணுக்குத் தொடர்பில்லாத, வரலாறு இல்லாத புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ளவர்களைத் தமிழ் வள்ளல்களுக்கு முற்பட்டவர்கள் என்று ஏற்பதுடன், அவர்களை உயர்வானவர்கள் என்று நம்புவதும், இளந்தலைமுறையினரிடம் அந்தப் பொய்யை உண்மை என்று நம்பவைப்பதும் கண்முன்னே நிகழ்ந்து வருவதைப் பார்க்க முடிகின்றது.

## குறிப்பு விளக்கம்


1. அ) Tamil Lexicon (uchicago.edu)

   ஆ) கடையெழு - அகரமுதலியின் தேடல் (xn--vkc6a6bybjo5gn.com)

2. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார் (திருத்தியது) ஆ. சிவப்பிரகாச முதலியார், சாரதா பதிப்பகம், G-4, சாந்தி குடியிருப்பு, 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 600 014.

3. 21 வள்ளல்கள் (thamizhsuvadi.com)

4. எழு பெருவள்ளல்கள், கி.வா. ஜகந்நாதன், 1909 (முதற்பதிப்பு), அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை

5. கடையெழு வள்ளல்கள் சரித்திரம், கா.மு.சின்னப்பா பிள்ளை, 1930 (முதற்பதிப்பு), பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், சென்னை, முன்னுரை பக். 3,4.